## பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையங்களை வினைத்திறனாக்குவதில் நூலகப்பொறுப்பாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்
### (கோப்பாய் கல்விக் கோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**ந. சாந்தலிங்கம்[1], க. சின்னத்தம்பி[2], க. சந்திரசேகர்[3]**

[1]யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி, யாழ்ப்பாணம்

[2]பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்

[3]நூலகம், யாழ் பல்கலைக்கழகம்

பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேர்ச்சி மைய கலைத்திட்டத்தினால், பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையங்களின் பயன்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கல்வியமைச்சு, தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களின் அனுசரணையுடன் பல்வேறு திட்டங்களை (GEP2, ஆசிரிய நூலகர் நியமனம், etc.) முன்னெடுத்து வருகிறது. இருப்பினும், நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாத நிலையில், அவற்றின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டிற்காக நூலகப் பொறுப்பாளர்கள் பல்வேறு சவால்களின் மத்தியில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருவதை அவதானிக்க முடிகிறது. இந்நூலகப் பொறுப்பாளர்கள் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தாழ்த்துவதற்கான வழிமுறைகளை முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். அதற்காக யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த கோப்பாய் கோட்டத்திலுள்ள 1AB, 1C, Type II பாடசாலைகள் (n=23) ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்டு, அங்கு கடமையாற்றும் நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்து வினாக்கொத்தின் மூலம் பாடசாலை, மற்றும் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையம் (நூலக நிதி, நூலக உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் வளச்சேர்க்கை, ஆளணி, நூலக ஒழுங்கமைப்பு, நூலக சேவைகள்) தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டன. மேலதிக தகவல்கள் நேரடி அவதானம், மற்றும் அதிபர், நூலகப் பொறுப்பாளர்களுடனான நேர்காணல்களின் மூலம் பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் வகைப்படுத்தப்பட்டு, புள்ளிவிபரவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பெறுபேறுகள் அட்டவணைகள், மற்றும் வரைபடங்களை பயன்படுத்தி அறிக்கையிடப்பட்டுள்ளன.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் 61%மானவற்றில் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையத்திற்கென தனியான கட்டிடம் காணப்படுகிறது. எனினும், 26%மான (n=6) பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையங்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்குவதை அவதானிக்க முடிந்தது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில், பல்வேறுபட்ட தகவல் வளங்களின் சேர்க்கை கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றமை வரவேற்கப்படவேண்டிய விடயம். இருப்பினும், இணையவழி தகவல் தேடல் வசதிகள் 95%மான பாடசாலை நூலகங்களில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. மேலும், நூலக செயற்பாடுகளுக்கான (நூல், பருவஇதழ் கொள்வனவு, நூலக பராமரிப்பு) நிதியானது

தரஉள்ளீடு, மாணவர் அங்கத்துவப் பணம், மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகளின் நன்கொடை மூலம் பெற்றுக்கொள்ளப்படுகிறது. இருந்தபோதிலும், கலைத்திட்ட மறுசீரமைப்பிற்கேற்ப மாணவர்களுக்குத் தேவையான நூல்களை போதியளவு கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது.

நூலக தகவல் வளங்களின் ஒழுங்கமைப்பு தொடர்பில், பகுப்பாக்கம், பட்டியலாக்கம் என்பன முறையே 48% (n=11), மற்றும் 17%மான (n=4) பாடசாலைகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. நூல் சேர்வுப் பதிவேடு, நூல் இரவல் வழங்கல் பதிவேடு தவிர்ந்த பிற பதிவேடுகளின் பேணல் தொடர்பில் போதிய அக்கறை செலுத்தப்படவில்லை. வருடாந்த நூல் நீக்க நடைமுறை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 26%மான பாடசாலைகளில் பின்பற்றப்படுவதில்லை. நூலக சேவைகளுள், நூல் இரவல் வழங்கல் சேவை, மற்றும் உசாத்துணை சேவை தவிர்ந்த ஏனைய சேவைகள் தொடர்பில் போதிய ஆர்வம் காட்டப்படவில்லை. நூலக செயற்பாடுகள் தொடர்பில் போதிய பயிற்சியின்மை, வேலைப்பழு, கற்பித்தல் பணி முன்னுரிமைப்படுத்தப்படுதல், பாடசாலை நிர்வாகத்தின் ஒத்துழைப்பின்மை என்பன இதற்கான காரணங்களாக முன்வைக்கப்பட்டன. அத்துடன், நூலகக் கற்றல் வள நிலைய செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தக்கூடிய நூலகக்குழு 69%மான (n=16) பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

நூலக ஆளணியைப் பொறுத்தவரையில், 30%மான (n=7) பாடசாலைகளில் ஆசிரிய நூலகர்களும், 65%மான (n=15) பாடசாலைகளில் ஆசிரியர்களும் பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையத்திற்கு பொறுப்பாக உள்ளனர். இவர்களுள், இருவர் மாத்திரமே நூலகவியல் சார் தொழில் தகைமையைப் பெற்றுள்ளனர். வலயக்கல்வி அலுவலகங்கள் நடாத்தும் நூலகப் பொறுப்பாளர்களுக்கான செயலமர்வுகளில் 30%மான (n=7) நூலகப் பொறுப்பாசிரியர்களே கலந்து கொள்கின்றனர்.

இன்றைய தகவல் யுகத்தில், பாடசாலை நூலகங்களின் முக்கியத்துவம் பலராலும் உணரப்பட்டுள்ள நிலையில், இவ்வாய்வானது பாடசாலை நூலகக் கற்றல் வள நிலைய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் நூலகப் பொறுப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. அத்துடன், பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையங்கள் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்கு, நூலக உட்கட்டமைப்பு, பௌதிக வளங்களின் விருத்தி, மற்றும் நூலகப் பொறுப்பாளர்களுக்கான வாண்மைவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டுமென இவ்வாய்வு முடிவுகள் வலியுறுத்துகின்றன. இதன் மூலம், மாணவர்களை சுயகற்றலுக்கு ஊக்குவிப்பதிலும், வள அடிப்படையிலான கற்றலுக்கு வழிப்படுத்துவதிலும் நூலகக் கற்றல் வள நிலையங்கள் பெரும் பங்காற்ற முடியும்.

**திறவுச் சொற்கள்:** பாடசாலை நூலகக் கற்றல் வள நிலையம், பாடசாலை நூலகங்கள், நூலகப் பொறுப்பாளர், ஆசிரிய நூலகர்